<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.</u>

**O.S. No.80/2022**

2023 ஆம் வருடம் மார்ச் மாதம் 9 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஈஸ்வரி (வா.சா.–1) | தொழில் | : |
| த/பெ., க/பெ. | : | வயது | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலுகா | : | நாள் | : 09.03.2023 |
| மாவட்டம் | : | | |

<u>முதல் விசாரணை:– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.)</u>

நான் வாதி. என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையவை தான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது. கொடிவழி ஜாபிதா வா.சா.ஆ.1. 28.09.1955 ஆம் தேதிய சின்னச்சாமிகவுண்டரம், அவரது சகோதரர்களும் பிறப்பித்துக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் ஆன்லைன் நகல் வா.சா.ஆ.2. 17.04.2008 ஆம் தேதி 3 முதல் 6 பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் ஆன்லைன் நகல் வா.சா.ஆ.3. 11.08.2008 ஆம் தேதி 3 முதல் 6 பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் ஆன்லைன் நகல் வா.சா.ஆ.4. 30.11.2009 ஆம் தேதி 10ம் பிரதிவாதிக்கு 3 முதல் 6 பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரத்தின் ஆன்லைன் நகல் வா.சா.ஆ.5. 06.10.2016 ஆம் தேதி 3 முதல் 6 பிரதிவாதிகளின் அதிகார முகவர் நிலையில் 12ம் பிரதிவாதி 11ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரத்தின் ஆன்லைன் நகல் வா.சா.ஆ.6. 30.01.2017 ஆம் தேதி 11ம் பிரதிவாதிக்கு 13ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த பரிவர்த்தனை பத்திரத்தின் ஆன்லைன் நகல் வா.சா.ஆ.7. 09.11.2020 ஆம் தேதி 14ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரத்தின் ஆன்லைன் நகல் வா.சா.ஆ.8. 20.08.2009 ஆம் தேதிய பிராது 1 லக்க சொத்துக்குரிய கணினி பட்டா நகல் வா.சா.ஆ.9. 25.03.2011 ஆம் தேதிய பிராது 2 லக்க சொத்துக்குரிய கணினி பட்டா நகல் வா.சா.ஆ.10. 20.08.2009 ஆம் தேதிய பிராது 2 லக்க சொத்துக்குரிய கணினி பட்டா நகல் வா.சா.ஆ.11.

20.08.2009 ஆம் தேதிய பிராது 3 லக்க சொத்துக்குரிய கணினி பட்டா நகல் வா.சா.ஆ.12. 25.03.2011 ஆம் தேதிய பிராது 3 லக்க சொத்துக்குரிய கணினி பட்டா நகல் வா.சா.ஆ.13. 12.11.2020 ஆம் தேதிய எனது தாயார் காளியாத்தாளின் வாரிசு சான்று ஆன்லைன் நகல் வா.சா.ஆ.14. 03.01.2022 ஆம் தேதி நான் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.15. அதனை 2 முதல் 12 மற்றும் 14 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் வா.சா.ஆ.16 வரிசை (12 எண்ணிக்கை). அந்த அறிவிப்பை 1–ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திரும்ப வந்த அஞ்சல் உறை வா.சா.ஆ.17. அந்த அறிவிப்பிற்கு 12ம் பிரதிவாதி அனுப்பிய 12.01.2022 ஆம் தேதிய பதில் அறிவிப்பு வா.சா.ஆ.18. அந்த அறிவிப்பிற்கு 13ம் பிரதிவாதி அனுப்பிய 12.01.2022 ஆம் தேதிய பதில் அறிவிப்பு வா.சா.ஆ.19. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u> – ஒத்திவைக்கப்படுகிறது.

JJEYASUTHAHAR Digitally signed by JJEYASUTHAHAR Date: 2023.03.09 15:53:41 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**